**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 , திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**முன்னிலை : திரு.S.கோவேந்தன், B.A., LL.B., (Hons).,**
நீதித்துறை நடுவர் எண்.3 (மு.கூ.பொ),
திருப்பத்தூர்.

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 123/2020</u>**

**F.NO.2787/2020**
**CNR.NO.TNTU02-002791-2020**

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
நாட்றம்பள்ளி காவல் நிலையம்,
நாட்றம்பள்ளி.
குற்ற எண். 150/2018 ......புகார்தாரர்

//எதிரிடை//

சீனிவாசன் த/பெ. கோவிந்தன் .....குற்றஞ்சாட்டப்பட்டவர்

(குற்றம்சாட்டப்பட்டவர் வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்கொண்டார்)

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சி.சி. எண். 123/2020 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | நாட்றம்பள்ளி காவல் நிலையம்,<br>குற்ற எண்.150/2018 |
| 3 | குற்றம் சாட்டப்பட்டது | இ.த.ச. பிரிவுகள் 294(b), 324,506(ii) |
| 4 | குற்றம் முன்னிலைப்படுத்தப்பட்டது | இ.த.ச. பிரிவுகள் 294(b), 324,506(ii) |
| குற்றம் சாட்டப்பட்டவரின் விவரம் | | |
| 5 | பெயர் மற்றும் தந்தை/கணவர் | சீனிவாசன் த/பெ. கோவிந்தன் |

KOVENDHAN S

Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

<table>
<tr><td></td><td>பெயர்</td><td colspan="3"></td></tr>
<tr><td>6</td><td>தொழில்</td><td colspan="3">–</td></tr>
<tr><td>7</td><td>முகவரி</td><td colspan="3">முத்தனப்பள்ளி கிராமம், நாட்றம்பள்ளி தாலுக்கா திருப்பத்தூர் மாவட்டம்.</td></tr>
<tr><td colspan="5">நாள்</td></tr>
<tr><td>8</td><td>குற்ற நிகழ்வு</td><td colspan="3">19.04.2018</td></tr>
<tr><td>9</td><td>புகார்</td><td colspan="3">20.04.2018</td></tr>
<tr><td>10</td><td>கைது செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">எதிரி கைது செய்யப்படவில்லை</td></tr>
<tr><td>11</td><td>எதிரி பிணையில் வந்த நாள்</td><td colspan="3">--</td></tr>
<tr><td>12</td><td>வழக்கு துவங்கிய நாள்</td><td colspan="3">16.02.2021</td></tr>
<tr><td>13</td><td>விசாரணை முடிக்கப்பட்ட நாள்</td><td colspan="3">24.03.2026</td></tr>
<tr><td>14</td><td>தீர்ப்பு</td><td colspan="3">விடுதலை</td></tr>
<tr><td>15</td><td>தாமதக் காரணம்</td><td colspan="3">--</td></tr>
<tr><td colspan="5">வழக்கின் நிலை</td></tr>
<tr><td>16</td><td>பிணைக்காலம்</td><td colspan="3">--</td></tr>
<tr><td>17</td><td>குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள்</td><td colspan="3">24.09.2020</td></tr>
<tr><td>18</td><td>பிரிவு 240 Cr.P.C (முதல் கேள்வி)</td><td colspan="3">18.02.2021</td></tr>
<tr><td>19</td><td>பல்வகை மனுவின் மீது இந்நீதிமன்றத்தின் உத்திரவு</td><td colspan="3">--</td></tr>
<tr><td rowspan="3">20</td><td rowspan="3">முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை</td><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td>முதல் விசாணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா. 1</td><td>17.03.2026</td><td>--</td></tr>
<tr><td>அ.சா. 2</td><td>17.03.2026</td><td>--</td></tr>
</table>

KOVENDHAN S

Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா. 3 | 17.03.2026 | -- |
| | | அ.சா. 4 | 17.03.2026 | 17.03.2026 |
| 21 | பிரிவு 313(1)(b) Cr.P.C (வினாவல்) | 23.03.2026 | | |
| 22 | தலைமறைவு எதிரியின் விவரங்கள்/ அவரது ஆஜர்/ஒப்படைப்பு | இல்லை | | |
| 23 | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கபட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும் | இல்லை | | |

இந்த வழக்கு 24.09.2020 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 11.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையிடுபவர் தரப்பில் உதவி அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.M. சிவா, B.A.,B.L., அவர்களும் ஆஜராகியும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்தும், சான்றாவணங்களையும் சாட்சியங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>தீர்ப்புரை</u>

### <u>(1) குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:</u>

இவ்வழக்கில் வாதியின் குடும்பத்தாருக்கும், எதிரியின் குடும்பத்தாருக்கும் தண்ணீர் பிடிப்பதில் முன்விரோதம் இருந்து வந்த நிலையில் கடந்த 19.04.2018 பகல் சுமார் 14.00 மணியளவில், இவ்வழக்கின் எதிரி குடித்துவிட்டு வந்து வாதியின் வீட்டு வாசல் வழியே அசிங்கமாக பேசி கொண்டு சென்றதாகவும், அப்போது எதிரியை பார்த்து வாதி, "தண்ணீர் டேப்பை உடைத்ததும் இல்லாமல் ஏன் அசிங்கமாக வார்த்தைகளால் திட்டுகிறாய்" என்று கேட்டபோது,

எதிரியானவர் வாதியை பார்த்து ஏண்டி தேவிடியா எதிர்த்து பேசுகிறாயா என்று தகாத வார்த்தையால் திட்டி, காய் நறுக்கும் கத்தியால் வாதியின் அடிவயிற்றில் குத்தி சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், பின்னர் அதே கத்தியை காட்டி இனிமேல் என்னிடம் வம்புக்கு வந்தால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதால், இ.த.ச. பிரிவுகள் 294(b),324 மற்றும் 506(ii)–இன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(2) இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக்கொண்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி ஆஜரானவுடன் குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரியிடம் வினவியபோது, எதிரி அதை மறுத்ததால் அரசு தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

(3) அரசு தரப்பில் **அ.சா.1 மற்றும் அ.சா.4** ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 12** வரையிலான ஆவணங்கள் மற்றும் **அ.சா.பொ 1– ம்** வழக்கிற்கு ஆதாரங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(4) அரசு தரப்பு சாட்சிகள் முடிவுற்ற பிறகு, சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து இ.த.ச. பிரிவுகள் 294(b),324 மற்றும் 506(ii) –ன் கீழ் வினாவியபோது எதிரி "பொய் சாட்சியம்" என்றும், அவர் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

**(5) அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

(i) அ.சா.1 கடந்த 20.04.2018 அன்று இரவு 08.00 மணிக்கு திருப்பத்தூர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுவருவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நாட்றம்பள்ளி காவல் நிலைய சிறப்பு காவல் உதவி

KOVENDHAN S
Judicial Magistrate No.III (FAC), Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

ஆய்வாளர் திரு.பிரபாகரன் அங்கு சென்று அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.6 புகார்வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டு, அ.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, தனது புலன்விசாரணையை முடித்து இறுதியறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார்.

**6). இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவெனில், அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான இந்திய தண்டனை சட்ட பிரிவு 294(b),324 மற்றும் 506(ii) இன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு உள்ளதா? இல்லையா ? என்பதே ஆகும்.**

**அரசு தரப்பு சாட்சிகளின் நீதிமன்ற விசாரணையின் சுருக்கம் :**

(i) அ.சா.1. பகுணா இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர். அவர் தனது நீதிமன்ற விசாரணையில், "நான் கடந்த 19.04.2018 அன்று பகல் 02.00 மணிக்கு, நான் என் வீட்டிடம் இருந்தபோது அடையாளம் தெரியாத நபர் என்னை தாக்கி விட்டு சென்றுவிட்டார். எனக்கும் எதிரிக்கும் பிரச்சனை இருந்து வந்ததால் எதிரி என்னை தாக்கியிருக்க கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நான் எதிரி மீது புகார் வாக்குமூலம் கொடுத்தேன்" புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ 1 என்னுடையது தான் என்று சாட்சியம் அளித்துள்ளதால் அவரது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு பலன்அளிக்கவில்லை.

(ii) இவ்வழக்கின் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 செல்வம் மற்றும் அ.சா.3 திரு. குண்டுமணி ஆகியோர் இந்த வழக்கு சம்மந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்கள் (அ.சா.ஆ2 முதல் 5 வரை) மட்டுமே தங்களுடையது என்று சாட்சியம் அளித்துள்ளதால் இவர்களது சாட்சியம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட

KOVENDHAN S
Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

குற்றச்சாட்டை நிருபிக்கும் விதமாக அமையவில்லை.

(iii) இவ்வழக்கின் அ.சா.4 சீனிவாசன் அவர்கள், புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு. பிரபாகரன், இவ்வழக்கில் அ.சா.1 அளித்த (அ.சா.ஆ.6) புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில், (அ.சா.ஆ.7) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் குண்டுமணி மற்றும் செல்வம் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் (அ.சா.ஆ 8), மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.9) தயார் செய்து, சம்பவயிடத்தில் இருந்து அ.சா.பொ 1 காய் நறுக்கும் கத்தி ஒன்றை (அ.சா.ஆ 10) கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி, அதனை (அ.சா.ஆ 11) படிவம் –91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, வழக்கு சம்பவத்தில் காயமடைந்த அ.சா1 க்கு சிகிச்சை அளித்த திரு. சிவக்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் (அ.சா.ஆ 12) பெற்று, அவரது புலன் விசாரணையை முடித்து, இவ்வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தது வரை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) அ.சா.1 தனது புகார் வாக்குமூலத்தில் எதிரி தன்னை தகாத வார்த்தையால் திட்டி, காய் நறுக்கும் கத்தியால் தனது அடிவயிற்றில் குத்தி காயம் ஏற்படுத்தி, கத்தியை காட்டி என்னிடம் வம்புக்கு வந்தால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறியதாக வாக்குமூலம் அளித்துள்ள போதிலும், தனது நீதிமன்ற விசாரணையில் எதிரி மீதான மேற்கண்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை.

(v) இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 மற்றும் அ.சா.2,3 ஆகியோர் குற்றசம்பவத்தில் எதிரியின் ஈடுபாடு குறித்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு, சாட்சியம் அளித்துள்ளபோது, புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள்

KOVENDHAN S
Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்பதால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(b),324 மற்றும் 506(ii)–இன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**7). இறுதியாக,**

அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 294(b),324 மற்றும் 506(ii) இன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று முடிவு செய்து, எதிரியை கு.ந.மு.ச பிரிவு 248(1) – இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் **C.P.No. 124/18** –இல் உள்ள வழக்குச்சொத்தான 4 1/2 இன்ச் கட்டை கைப்பிடியுடன் கூடிய சுமார் 11 இன்ச் அளவு கொண்ட **காய் அறுக்கும் இரும்பு கத்தி** ஒன்று மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

எதிரி எழுதிக்கொடுத்த பிணையம் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்குச் சொல்லச்சொல்ல, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, திருத்தங்களுக்குப் பிறகு 2026–ஆம் வருடம் மார்ச் மாதம் 24 –ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

KOVENDHAN S

Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

நீதித்துறை நடுவர் எண்.III (மு.கூ.பொ)
திருப்பத்தூர்.

**இணைப்பு :**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| **அ.சா.1** | திருமதி. பகுணா க/பெ. தனசேகரன் |
| **அ.சா.2** | திரு. செல்வம் த/பெ. துரைசாமி |
| **அ.சா.3** | திரு. குண்டுமணி த/பெ. சேட்டு |
| **அ.சா.4** | திரு. சீனிவாசன் த/பெ. ராமசாமி |

**அரசு தரப்பு சாட்சி ஆவணங்கள்**

| | |
|---|---|
| **அ.சா.ஆ.1** | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் |
| **அ.சா.ஆ.2** | பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் |
| **அ.சா.ஆ.3** | கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையொப்பம் |
| **அ.சா.ஆ.4** | பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் |
| **அ.சா.ஆ.5** | கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையொப்பம் |
| **அ.சா.ஆ.6** | புகார் வாக்குமூலம் |
| **அ.சா.ஆ.7** | முதல் தகவல் அறிக்கை |
| **அ.சா.ஆ.8** | பார்வை மகசர் |
| **அ.சா.ஆ.9** | மாதிரி வரைபடம் |
| **அ.சா.ஆ.10** | கைப்பற்றுதல் மகசர் |
| **அ.சா.ஆ.11** | படிவம் –91 |
| **அ.சா.ஆ.12** | காயச்சான்று |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்– CP.No. 124/2018**

**அ.சா.பொ.1** – 4 1/2 இன்ச் கட்டை கைப்பிடியுடன் கூடிய சுமார் 11 இன்ச் அளவு கொண்ட **காய் அறுக்கும் இரும்பு கத்தி** ஒன்று.

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்று ஆவணங்கள் – இல்லை**

KOVENDHAN S

Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

**<u>குறிப்பு</u>**

1. சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
2. வழக்கு விசாரணை சமயம் எதிரிகள் பிணையில் இருந்தனர்.
3. வழக்கின் முடிவு பற்றி சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.
4. வழக்குச்சொத்துக்கள் பற்றிய உத்தரவை வழக்குச் சொத்துக்கள் பதிவேட்டில் பதிய உத்தரவிடப்பட்டது.

KOVENDHAN S

Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

நீதித்துறை நடுவர் எண்.III (மு.கூ.பொ)
திருப்பத்தூர்.